بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *07/02/2025* அன்று *U.K* - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

- **கைபர் போரின் பின்னணியில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு**
- **துஆக்களுக்கான கவனமூட்டல்**

أَشۡهَدُ أَنۡ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔ بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿۱﴾

اَلۡحَمۡدُ لِلّٰهِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِكِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاكَ نَعۡبُدُ وَ اِیَّاكَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡهِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡهِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

**கைபர் போர் பற்றி கூறப்பட்டு வந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் கைபரை நோக்கி புறப்பட்ட விபரம் இவ்வாறு எடுத்துரைக்கபட்டுள்ளது;** பெருமானார் (ஸல்) அவர்களின் தலைமையில் உயிரை அர்ப்பணிக்க தயாராக இருந்த 1600 வீரர்களைக் கொண்ட படை மதீனாவிலிருந்து புறப்பட்டது. ஆனால் புறப்படுவதற்கு முன்பு, செய்தியை சேகரிக்கக் கூடிய ஒரு குழுவை அன்னார் முன்னால் அனுப்பி வைத்தார்கள். அதனுடைய வேலை, படைக்கு முன்னால் சென்று பாதைகளையும் சூழ்நிலையையும் கண்காணித்துக் கொண்டிருக்க வேண்டும். இந்தக் குழுவுக்கு தலைவராக ஹஸ்ரத் அப்பாத் பின் பிஷ்ர் அன்சாரி (ரலி) அவர்கள் இருந்தார்கள். கைபர் செல்லும் வழிகளை தெரிவிப்பதற்காக இரு வழிகாட்டிகள் கூலிக்கு பணியமர்த்தப்பட்டிருந்தார்கள். மதீனாவில் இருந்து கைபர் செல்லும் போது பல்வேறு இடங்களில் முகாமிட்டவாறு சஹ்பா எனும் இடத்தை அடைந்தபோது அங்கு தங்கினார்கள். தொழுகைக்கான நேரம் ஆனபோது அங்கு தொழுகை நிறைவேற்றப்பட்டது. புகாரியுடைய அறிவிப்பில் இவ்வாறு வருகிறது; சஹ்பாவில் அன்னார் அஸ்ர் தொழுதார்கள். அதற்குப் பிறகு உண்ணுவதற்காக ஏதேனும் கொண்டு வரும்படி கூறினார்கள். படையினரிடம் சத்துமாவு மட்டுமே இருந்தது. பெருமானார் (ஸல்) அவர்களும் சஹாபிகளும் அதையே உண்டார்கள். அறிவிப்பாளர் கூறுகிறார்: பிறகு, அன்னார் மக்ரிப் தொழுகைக்காக எழுந்து நின்றார்கள். அன்னார் வாய் கொப்பளித்தார்கள். நாங்களும் வாய் கொப்பளித்தோம். பிறகு, அன்னார் தொழுதார்கள். மீண்டும் புதிதாக உளூ செய்யவில்லை.

பயணத்தின் போது எவ்வாறான சில சம்பவங்களும் நிகழ்ந்தனவென்றால், அந்த அவசர காலங்களிலும் கூட பெருமானார் (ஸல்) அவர்கள் ஸஹாபிகளின் தர்பிய்யத்தை எந்த அளவு கவனத்தில் கொண்டார்கள் என்பதை அறிய முடிகிறது. ஒழுங்குமுறை, கட்டுப்படுதல், கீழ்ப்படிதல் போன்ற பண்புகளை உருவாக்குவதன் பக்கம் கவனமூட்டி வந்தார்கள். இவ்வாறான ஒரு சம்பவம் வருகிறது; ஒரு நாள் இரவில் படைக்கு முன்னால் ஏதோ ஒரு பொருள் மின்னிக் கொண்டிருப்பதாக தெரிந்தது. அதனால் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு கவலை ஏற்பட்டது. அது என்னவென்று அறிந்தபோது, இஸ்லாமிய படையைச் சார்ந்த ஒரு வீரர் படையை விட்டு எல்லோருக்கும் முன்னால் சென்று கொண்டிருந்தார். நிலவொளியில் அவருடைய தலைக்கவசம் மின்னிக் கொண்டிருந்தது. அவருடைய பெயர் அபூ அபஸ் ஆக இருந்தது. அவர் அன்னாரிடம் அழைத்து வரப்பட்டபோது, படையுடன்தான் செல்ல வேண்டும் என்று அன்னார் அறிவுரை கூறினார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் பனூ கத்ஃபானை நோக்கி சமாதான தூதுச்செய்தியையும் அனுப்பி வைத்தார்கள். பனூ கத்ஃபான் குலத்தார் கைபர் வாசிகளுக்கு உதவி செய்வதாக

வாக்குறுதி அளித்துள்ளார்கள் என்றும், இஸ்லாமிய படை கைபரை சென்றடைவதற்கு முன்பே வழியிலேயே இஸ்லாமிய படை மீது தாக்குதல் நடத்த எண்ணம் கொண்டு மேற்கொண்டு 4000 படை வீரர்களை அழைத்துக் கொண்டு அவர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியும் அன்னாருக்கு கிடைத்திருந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் பனூ கத்ஃபானை தொடர்பு கொண்டார்கள். அவர்களுக்கு கடிதம் ஒன்றை அனுப்பினார்கள். அந்த கடிதத்தில், கைபருடன் நடக்கக்கூடிய போரில் நடுநிலை வகுக்க வேண்டும் என்றும், அல்லாஹ் எனக்கு வெற்றியை வழங்குவதாக வாக்குறுதி அளித்திருக்கிறான் என்றும் தெளிவாக எழுதியிருந்தார்கள்.

ஆனால் 1600 முஸ்லிம்களுக்கு எதிரில் 15000 போர் வீரர்களைக் கொண்ட படையும், உறுதியான கோட்டைகளும் இருந்த காரணத்தினால் அதன் ஆணவம் அவர்களின் சிந்தனைகளில் பதிந்திருந்தது. அதன் காரணமாக அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் இந்த கோரிக்கையை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டார்கள்.

ஆகவே பெருமானார் (ஸல்) அவர்கள் கஸ்ரஜ் கோத்திரத்தின் தலைவரும் கலப்பற்ற சஹாபியுமான ஹஸ்ரத் சஅது பின் உபாதா (ரலி) அவர்களை பனூ கத்ஃபானுடைய தளபதியான உயைனா பின் ஹிஸ்னிடம் அனுப்பி வைத்தார்கள். உயைனா, ஹஸ்ரத் சஅது பின் உபாதா (ரலி) அவர்களை கோட்டைக்கு வெளியே சென்று சந்தித்தார்.

ஹஸ்ரத் சஅது பின் உபாதா (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் தூதுச் செய்தியை உயைனாவிடம் கூறினார்கள். அதற்கு உயைனா ஹஸ்ரத் சஅது (ரலி) அவர்களிடம், நாங்கள் எங்களது நட்புக் கோத்திரத்தை எவ்வகையிலும் கைவிட மாட்டோம். உங்களைப் பற்றி எங்களுக்கு தெரியும்; உங்களிடம் என்ன ஆற்றல்தான் இருக்கிறது! போரிட்டால் நீங்கள் அனைவரும் அழிந்து விடுவீர்கள். நீங்கள் வெற்றி பெற்ற குரைஷியர்களைப் போன்று இந்த யூதர்கள் கிடையாது என்று கூறினார். அத்துடன், எனது இந்த செய்தியை முஹம்மது (ஸல்) அவர்களுக்கும் கூறிவிடுங்கள் என்றார்.

அவருடைய இந்த ஆணவமான பதிலைக் கேட்ட ஹஸ்ரத் சஅது (ரலி) அவர்கள், முஹம்மது (ஸல்) அவர்கள் நிச்சயமாக உம்மிடத்தில் இந்த கோட்டைக்குள் வருவார்கள். நாங்கள் இப்போது உம் முன்னால் எடுத்து வைத்த கோரிக்கைகளை நீர் அப்போது வேண்டுவீர். ஆனால் அப்போது உமக்கு வாளைத் தவிர வேறு ஒன்றும் கிடைக்காது. உயைனாவே! நாங்கள் மதீனாவின் யூதர்களுடைய முற்றத்திலும் இறங்கினோம். அவர்கள் முற்றிலும் அழிந்து போனதையும் நான் கண்டேன். இதற்கு நான் சாட்சி பகர்கிறேன் என்று கூறிவிட்டு திரும்பி வந்தார்கள்.

**இறைவன் மீதான மதிப்பு கலந்த அச்சமும், கத்ஃபான் மக்கள் ஓட்டம் பிடித்தது பற்றிய குறிப்பும் காணக் கிடைக்கிறது;** نُصِرْتُ بِالرُّعْبِ ‘மதிப்பு கலந்த அச்சத்தின் மூலமாக எனக்கு உதவி செய்யப்பட்டுள்ளது’ என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். இந்த சம்பவம் மீண்டும் ஒருமுறை இங்கு கத்ஃபான் படைகளுடன் நடைமுறையில் வெளிப்பட்டது. பனூ கத்ஃபானுடைய 4000 பேர்களைக் கொண்ட படை இஸ்லாமிய படையை தாக்குவதற்காகவும், முஸ்லிம்கள் கைபரை சென்றடைய விடாமல் தடுப்பதற்காகவும் விரட்டி வந்து கொண்டிருந்தது. ஆனால் இறைவனுடைய நியதி எவ்வாறு வெளிப்பட்டது என்றால், கத்ஃபானுடைய இந்த படை திடீரென்று திரும்பிச் சென்று விட்டது. தம் வீடுகளை நோக்கி திரும்பி விட்டது.

பெருமானார் (ஸல்) அவர்கள் தங்கள் மீது தாக்குதல் நடத்துவார்கள் என்று யூதர்கள் எண்ணியிருக்கவில்லை. ஏனென்றால் அவர்களுக்கு தம்முடைய கோட்டைகளின் மீதும், போர் தளவாடங்கள் மீதும், ஆள்பலம் மீதும் ஆணவம் இருந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் தம்மை நோக்கி வருவதாக யூதர்கள் கேள்விப்பட்டபோது ஒவ்வொரு நாளும் 10 ஆயிரம் போர் வீரர்கள் அணிவகுத்து வெளியே வந்து நிற்பார்கள். முஹம்மது (ஸல்) நம் மீது படையெடுப்பு செய்ய முடியுமா என்ன? அது ஒருபோதும் சாத்தியம் கிடையாது என்று

கூறுவார்கள். ஆனால் பெருமானார் (ஸல்) அவர்கள் அம்மக்களை சென்றடைந்தபோது அவர்கள் அதை அறிந்திருக்கவில்லை. எந்த அளவுக்கென்றால், பகல் விடிந்த போது காலை நேரத்தில் யூதர்கள் தம் கோட்டைகளை விட்டு வெளியே வந்தார்கள். அவர்களுடைய கைகளில் மண் வெட்டிகளும் கூடைகளும் இருந்தன. அவர்கள் அன்னாரைக் கண்டபோது ஓடிச் சென்று தம் கோட்டைகளுக்குள் ஒளிந்து கொண்டார்கள்.

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: அவர்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களைப் பார்த்த போது, “முஹம்மதும், அல்லாஹ்வின் மீதாணையாக! முஹம்மதும், அவரது படையும் (வருகின்றனர்) என்று கூறினர். அப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், خَرِبَتْ خَيْبَرُ، إِنَّا إِذَا نَزَلْنَا بِسَاحَةِ قَوْمٍ فَسَاءَ صَبَاحُ الْمُنْذَرِينَ கைபர் பாழாகிவிட்டது! நாம் ஒரு சமுதாயத்தின் களத்தில் (அவர்களுடன் போரிட) இறங்குவோமாயின் எச்சரிக்கப்பட்ட(வர்களான அந்தச் சமுதாயத்த)வர்களுக்கு அது மிகக் கெட்ட காலையாகும் என்று கூறினார்கள்.

**கைபரில் பல்வேறு கோட்டைகள் இருந்தன. அவற்றின் விபரங்கள் குறித்தும் எடுத்துரைப்பது அவசியமாகும்.** புவியியல் ரீதியாக அவை எவ்வாறு பிரிக்கப்பட்டிருந்தன என்பதைக் குறித்து இவ்வாறு குறிப்பு காணப்படுகிறது; ஏனென்றால் இந்த (கைபர்) போர் கோட்டைகளுடன் சம்பந்தப்பட்டதாக இருந்தது. ஒன்றிற்குப் பிறகு இன்னொன்று என்று ஒவ்வொரு கோட்டையாக வெற்றி கொள்ளப்பட்டது. அந்த கோட்டைகளுடைய எண்ணிக்கை தொடர்பாக கருத்து வேறுபாடு காணப்படுவது மட்டுமின்றி அவற்றின் பெயர் தொடர்பாகவும் கருத்து வேறுபாடு காணப்படுகின்றது. அனைத்து நூல்களையும் பார்க்கும்போது, கைபர் பகுதி, ந(த்)தா, ஷக் மற்றும் கதீபா எனும் மூன்று பகுதிகளாக பிரிந்திருந்தது என்று கூறலாம். இந்த மூன்று பகுதிகளிலும் (மொத்தம்) 8 கோட்டைகள் இருந்தன. ந(த்)தாவில் நாயிம், ஸஅப் மற்றும் ஸுபைர் எனும் மூன்று கோட்டைகள் இருந்தன. ஷக் -ல் உபை, பரீ எனும் இரு கோட்டைகள் இருந்தன. சிலரைப் பொருத்தவரை அ(தன் பெயர் பரீ கிடையா)து நஸார் ஆகும். கதீபாவில் கமூஸ், வத்தீஹ் மற்றும் சுலாலிம் எனும் மூன்று கோட்டைகள் இருந்தன.

போர் ஆரம்பிப்பதற்கு முன்பு பெருமானார் (ஸல்) அவர்கள் சஹாபிகளிடத்தில் ஒரு சுருக்கமான சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். ‘எதிரியை எதிர்கொள்ள வேண்டும் என்று ஆவல் கொள்ளாதீர்கள். அல்லாஹ்விடம் நலனை வேண்டுங்கள். நீங்கள் எந்த சோதனையில் இடப்படுவீர்கள் என்று உங்களுக்கு தெரியாது! நீங்கள் எதிரியை எதிர்கொள்ள நேர்ந்தால், அல்லாஹ்வே! நீ எங்களுடைய இறைவனும் ஆவாய் அவர்களின் இறைவனும் ஆவாய். அவர்களின் விதியும் எங்களின் விதியும் உன் கையில் உள்ளது. நீயே அவர்களை அழிப்பாயாக என்று துஆ செய்யுங்கள் என்றார்கள்.

நாயிம் கோட்டை யூதர்களுடைய மிகப் பலம் வாய்ந்த கோட்டையாக இருந்தது. கைபரின் துணிச்சல்மிகுந்த, புகழ்பெற்ற போர் வீரனான மர்ஹப் என்பவன் இந்த கோட்டைக்கு தலைமை வகித்துக் கொண்டிருந்தான். அறிவிப்பில் இருந்து தெரிவதென்னவென்றால், பெருமானார் (ஸல்) அவர்கள் 10 நாட்கள் தொடர்ச்சியாக போரிட்டுக் கொண்டிருந்தார்கள். தொடர் தோல்விகள், சஹாபிகள் காயம் அடைந்தது மற்றும் இரு சஹாபிகள் ஷஹீதானது ஆகியவற்றால் யூதர்களின் துணிவு இன்னும் அதிகரித்துக் கொண்டிருந்தது. இறுதியில் ஓர் இரவில் பெருமானார் (ஸல்) அவர்கள், ‘எவருடைய கையில் அல்லாஹ் வெற்றியை வழங்க இருக்கின்றானோ அவருடைய கையில் நாளை நான் கொடியை கொடுப்பேன். அவர் அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதரை நேசிக்கின்றார்’ என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இது தொடர்பாக இவ்வாறு கூறுகிறார்கள்: ஒரு நாள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் இறைவன், இந்த நகரத்தின் வெற்றி ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் கையில் விதிக்கப்பட்டுள்ளது என்று கூறினான். அன்னார் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை அழைத்தார்கள். அவர்களிடம் கொடியை ஒப்படைத்தார்கள். ஹஸ்ரத்

அலீ (ரலி) அவர்கள் சஹாபிகளின் படையை அழைத்துக் கொண்டு கோட்டை மீது தாக்குதல் தொடுத்தார்கள். யூதர்கள் கோட்டையை அடைத்துக் கொண்டு உள்ளே இருந்தாலும் அல்லாஹ் அந்நாளில் ஹஸ்ரத் அலீ (ரலி) மற்றும் சஹாபிகளுக்கு எவ்வாறான ஆற்றலை வழங்கினான் என்றால் மாலை நேரம் ஆவதற்கு முன்பே கோட்டை வெற்றி கொள்ளப்பட்டது. யூதர்கள் தோல்வி அடைந்தபோது, நாயிம் கோட்டையை முஸ்லிம்கள் தாக்கியதை தடுக்க முடியாமல் போனபோது அவர்களும் எளிதாக சஅப் பின் முஆஸ் எனும் கோட்டைக்கு மாறிச் சென்று விட்டார்கள். நாயிம் கோட்டையில் போர் நடைபெற்ற போது எந்த ஒரு யூதனும் முஸ்லிம்களின் கையில் சிக்கவில்லை.

மற்ற கோட்டைகளின் சம்பவங்களும் உள்ளன. இனி வரும் காலத்தில் அவை எடுத்துக் கூறப்படும் இன்ஷா அல்லாஹ்!

**உலகின் சூழ்நிலைகளை குறித்தும் முஸ்லிம்களின் சூழ்நிலைகளை குறித்தும் நான் துஆவுக்காக கூறி வருவது போன்று, பாலஸ்தீனர்களுக்காக குறிப்பாகவும், முஸ்லிம் உலகிற்காக பொதுவாகவும் அதிகமாக துஆ செய்யுங்கள்.** போர் நிறுத்தம் செய்யப்பட்டு விட்டது என்று மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளார்கள். வெளிப்படையில் பார்க்கும் போது நிலைமைகள் மேம்பட்டு விடும் என்பது போல் தெரிகிறது. ஆனால் நிலைமையோ மோசத்திலும் மோசமாகிக் கொண்டே செல்கிறது. புதிய அமெரிக்க அதிபருடைய செயல்திட்டம் மற்றும் கொள்கைகளும் அநீதியின் மற்றொரு உச்சகட்டமாக உள்ளது. (புதிய அதிபராகிய) இவர் நம் நாட்டிற்கு மிகவும் ஆபத்தானவர்; வெளியே மற்ற நாட்டு விஷயத்தில் இவர் தலையிடுவதில்லை என்று அமெரிக்கர்கள் முதலில் கூறி வந்தார்கள். ஆனால், இப்போதோ இவர் முழு உலகிற்கும் ஆபத்தானவராக ஆகி விட்டார்!

அல்லாஹ் பாலஸ்தீனர்கள் மீது கருணை காட்டுவானாக! உலகின் மீது கருணை காட்டுவானாக! அவரிடமிருந்து (மக்கள்) தப்பித்திருக்கட்டுமாக! அரேபிய நாடுகள் இப்பொழுதாவது தம் கண்ணை திறக்க வேண்டும்; ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு முயற்சிக்க வேண்டும். இதுவன்றி வேறு வழியொன்றும் இல்லை! இல்லையென்றால், பாலஸ்தீனர்கள் மட்டுமின்றி மீதம் இருக்கின்ற அரேபிய நாடுகளும் கடும் கஷ்டத்தை எதிர்கொள்ள வேண்டியது வரும். இப்பொழுது சில முஸ்லிம் அல்லாதவர்கள் சார்பாகவும் பாலஸ்தீனர்களுக்கு சாதகமாக, அநீதிக்கெதிராக குரல் எழும்பத் தொடங்கியிருக்கின்றது. ஆனால், வல்லரசு இப்பொழுது முழுமையாக தம் ஆற்றலின் மிதப்பில் இருக்கிறது. யாருடைய பேச்சையும் கேட்க விரும்பவில்லை.

ஆகவே, முஸ்லிம்கள் மிக அதிகமாக கவனம் செலுத்த வேண்டிய தேவை உள்ளது. அவர்களுக்காக நாம் துஆக்களை செய்ய வேண்டிய தேவை உள்ளது. நம்மிடத்தில் (இதைத்தவிர) வேறு எந்த ஆற்றலும் கிடையாதே!

அதேபோன்று, பாகிஸ்தானுடைய அஹ்மதிகளுக்காகவும், துஆ செய்யுங்கள். அவர்களின் சூழ்நிலையும் எதிர்ப்பின் காரணமாக சில நாட்களில் சில சமயங்களில் அதிக கடுமையானதாக ஆகி விடுகின்றது. பங்களாதேஷுடைய அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களையும் எல்லாவிதமான எதிர்ப்புகளில் இருந்தும், தாக்குதல்களிலிருந்தும் காப்பாற்றுவானாக! மற்ற இடங்களில் உள்ள அநீதிக்குள்ளான மக்களுக்காகவும் துஆ செய்யுங்கள். அநீதிக்குள்ளான அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அவர்கள் அனைவரையும் அல்லாஹ் தனது பாதுகாப்பிலும், அடைக்கலத்திலும் வைப்பானாக! உலகிற்கு அறிவை கொடுப்பானாக! அமைதியை ஏற்படுத்துவதன் பக்கம் அவர்கள் அனைவருக்கும் கவனம் பிறக்கட்டுமாக! அல்லாஹ் நமக்கு துஆக்களுக்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! (ஆமீன்)

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَن يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)